**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 188/2018** **தேதி: 20.08.2025**

**வா.சா. 1 – வைஷ்ணவி**

**1, 2 & 7–ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது தகப்பனாரும், 1–ம் பிரதிவாதியும், பாட்டி ஞானசௌந்தரியம்மாளும் குடும்ப சொத்துக்களை பிரித்துக் கொண்டதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டதற்கு ஒரு மெமோரண்டம் எழுதிக் கொண்டதாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த மெமோரண்டத்தை நான் பார்த்ததில்லை. அதை எனது அப்பா சொல்லியிருக்கிறார். மேற்படி மெமோரண்டத்தில் தாவா சொத்து சேர்ந்துள்ளதா என்றால், எனக்கு தெளிவாக தெரியவில்லை. எனது அப்பாவிடம் கேட்டால் தான் தெரியும். தாவா சொத்து மெமோரண்டத்தில் காட்டப்பட்டுள்ளது என்றும், அதன் படி பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை. பிராதின் ஆவணப்பட்டியிலில் மெமோரண்டம் நகல் 14–வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் படித்துப் பார்த்தபின்பு பிராதுடன் தாக்கல் செய்தேனா என்றால், நான் முழுவதுமாக படித்துப் பார்க்கவில்லை. ஆனால் அந்த ஆவணத்தை பார்த்திருக்கிறேன். மேற்படி மெமோரண்டத்தில் எனது பாட்டி, எனது அப்பா, பெரியப்பா ஆகியோர் குடும்ப ஏற்பாட்டின் மூலம் குடும்ப சொத்துக்களை பிரித்துக் கொண்டதில் தாவா சொத்து, குடும்ப ஏற்பாட்டில் ஒரு சொத்தாக பிரித்துக் கொள்ளவில்லை என்றும், அதனால் மெமோரண்டம் ஆவணத்திலும் தாவா சொத்து பற்றிய குறிப்பு ஏதும் இல்லை என்பதால், மேற்படி மெமோரண்டம் நகலை நான் எனது சாட்சியத்தில் குறியீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை எனது அப்பாவும், எனது பெரியப்பாவும் பிரித்துக் கொண்டதற்கான ஆவண சாட்சியம் ஏதும் உள்ளதா

என்றால் இல்லை. அவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்திற்கு 3–ம் பிரதிவாதி கமலாம்மாள் பெயரிலும், பிற்பாடு 1–ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். 2018–ல் தான் தெரியவந்தது. 3–ம் பிரதிவாதி கமலாம்மாள் பெயரிலும், பிற்பாடு 1–ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா ஏற்பட்ட விவரம் எனது அப்பாவிற்கு தெரியும் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 3–ம் பிரதிவாதி கமலாம்மாள் தாவா சொத்தை 1–ம் பிரதிவாதிக்கு 2010–ம் வருடம் கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அது மோசடி கிரைய ஆவணம். அது மோசடி கிரைய ஆவணம் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் எனது தாத்தா பெயரிலிருந்து எனது தந்தை 2018–ல் எனக்கு செட்டில்மெண்ட் கொடுத்தார். அதன் அடிப்படையில் நான் 2010 கிரைய ஆவணத்தை மோசடி ஆவணம் என்று சொல்கிறேன். தாவா சொத்தை எனது அப்பாவிடமிருந்து நான் தான பத்திரம் எழுதி வாங்கிய பொழுது நான் வில்லங்கச்சான்றிதழ் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. பின்னால் நான் பட்டா மாறுதல் செய்யும் பொழுது தான் வேறு ஒரு நபரின் பெயர் சொத்து உள்ளது என்ற விவரம் தெரிந்து கொண்டேன். யார் பெயரில் சொத்து இருந்தது என்றால் பெரியப்பா பெயரில் இருந்ததாக ஞாபகம் உள்ளது. தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் எனது தாத்தா தியாகராஜ ரெட்டியார் பெயரில் பட்டா இருந்ததில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு குடும்ப ஏற்பட்டின் படி கிடைத்த சொத்துக்களை என் பெரியப்பா பெயருக்கும், எனது பெரியப்பாவிற்கு கிடைத்த சொத்துக்களை என் அப்பா பெயருக்கும், வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 மூலம் பரஸ்பர தான பத்திரங்கள் ஏற்படுத்திக் கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தி ஒரு வார காலத்திலேயே எனது அப்பாவும், பெரியப்பாவும் பதிவு தானப் பத்திரங்களை ஏற்படுத்தி அதன் மூலம் குடும்ப ஏற்பாட்டில் அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவரவர் பெயரில் மீண்டும் நிறுவப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது அப்பா, எனது

பெரியப்பாவிற்கு எழுதிக் கொடுத்த தானப்பத்திரம் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகிய எந்த ஆவணத்திலும் தாவா சொத்து காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா பெயரில் கிரையம் ஏற்பட்டிருந்தாலும், கமலம்மாள் கணவரை விட்டு பிரிந்திருந்த நிலையில் எனது தாத்தா தாவா புல எண்.60/15 1 ஏக்கர் 7 செண்ட் முழுமையும் கமலம்மாளிடம் கொடுத்து, கமலம்மாள் வகையிலேயே தாவா சொத்து நெடுகிலும் அனுபவிக்கப்பட்டு வந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காரணத்தினால் தான் தியாகராஜ ரெட்டியார் தன் பெயருக்கு பட்டா ஏதும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா, எனது பெரியப்பாவிற்கு தெரிந்தே தாவா சொத்திற்கு கமலம்மாள் பெயரில் 1333 என்ற எண்ணில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்து எங்கள் குடும்பத்திற்கு உரிமை படாத சொத்து என்ற காரணத்தினால்தான் எனது அப்பாவும், பெரியப்பாவும் தாவா சொத்திற்கு பட்டா வாங்குவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கமலம்மாள், 1–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தன் பேரில் 1–ம் பிரதிவாதிக்கு 4483 என்ற எண்ணில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4–ல் 14–வது தாளில் தாவா சொத்திற்குண்டான பட்டா பிரபாகரன் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும், அது ஆவணத்தில் இணைத்து காட்டப்பட்டுள்ளது என்றும், அது பற்றி எங்களுக்கு நன்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது அப்பா மற்றும் பெரியப்பாவிற்கு உரிமை இல்லை என்பதால் தான் தாவா சொத்து பாகத்திற்கு உட்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது அப்பாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அதனால் தாவா சொத்தை பொறுத்து எனது பெயருக்கு தான பத்திரம் எழுதி வைக்க எனது அப்பாவிற்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாத்தா

உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்திற்கு அக்கம்பக்கத்து சொத்துக்காரர்கள் ஆவணங்கள் இயற்றிய காலங்களில் தாவா சொத்து கமலம்மாள் வகை சொத்து என்று நான்கு எல்லையில் காட்டியுள்ளனர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்களை என் தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணங்களில் நான்கு எல்லையில் தாவா சொத்தினை கமலம்மாள் சொத்து என்று காட்டி ஆவணங்களை பெற்றுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் வாங்கிய சொத்துக்களை எனது தகப்பனார் பிற்பாடு விற்கிரையம் செய்த ஆவணங்களிலும் தாவா சொத்தினை கமலம்மாள் சொத்து என்று ஆவணங்களில் காட்டியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து 1–ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய அடிப்படையில் தாவா சொத்து 1–ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றும், அது பற்றி எனது தகப்பனாருக்கு எந்த அறிவிப்பும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 தானப்பத்திரம் விவகாரத்திற்காக எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4–ல் தாவா சொத்து எனது அப்பாவும், எனது பெரியப்பாவும் பாகம் பிரித்ததன் அடிப்படையில் எனது அப்பாவிற்கு பாத்தியம் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு வீண் விவகாரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல. நான் கோரிய எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.